(7) தகவல் கோரல்.

இந்தியப் பிரதமரிடமிருந்து தமிழக முதல்வருக்கு வந்திருப்பதாகக் கூறப்படும் கடிதம் குறித்து.

திரு. மு. கருணாநிதி: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். தலைவர் அவர்களே, அண்மையில் நம்முடைய பேரவையில் நடந்து முடிந்த ஆளுநர் அவர்களின் உரைக்குப் பிறகு இந்திய திருநாட்டினுடைய பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியதாக ஏடுகளில் செய்திகள் விரிவாக வந்துள்ளன. அதுபற்றி முதல் அமைச்சர் அவர்கள் இதுவரையில் எந்தப் பதிலும் அளிக்கவில்லை. அப்படி ஏதாவது பிரதம அமைச்சர் அவர்களிடமிருந்து நம் முதல் அமைச்சர் அவர்களுக்கு கடிதம் வந்ததா? மத்திய-மாநில உறவுகள் பற்றியும் மொழிப் பிரச்சினை பற்றியும் கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டது தவறு என்றோ அல்லது தன்னைக் கேட்காமல், தன்னோடு கலந்து பேசாமல், அவை பற்றிக் கூறாமல் வெளியிட்டு விட்டது சரி அல்ல என்று கருத்துப்பட ஏதாவது முதல் அமைச்சர் அவர்களுக்கு கடிதம் வந்ததா என்பதை நான் அறிந்து கொள்ளக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, இந்தச் சபை விதிமுறைகளுக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கிளப்பிய கேள்விகள் ஒத்துவருகின்றனவா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். திடீரென்று எழுந்து சபையில் இல்லாத ஒரு பிரச்னைபற்றி அவர்கள் கேட்கிறார்கள். அதற்கு விதிகள் அனுமதிக்கின்றனவா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிகளில் தெளிவாக ஒன்றும் கிடையாது. ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முன்கூட்டியே அவர்களிடம் சொல்லி அவர்களிடம் விளக்கம் கேட்டிருந்தால் விளக்கம் கொடுப்பது நலமாக இருக்கும். பேசியதற்குப் பிறகு ஏதாவது கேட்பதாக இருந்தால் பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன் கேட்கலாம். ஆனால் அவர்கள் இப்போது இதைப் புதிதாக எழுப்புகிறார்கள்.

திரு. மு. கருணாநிதி: தலைவராக இருப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏற்கனவே இந்த மன்றத்தில் பல காரியங்களுக்கான விளக்கங்களைக் கேட்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சி சார்பில், அவைத் தலைவர் அவர்கள் அங்கு வீற்றிருந்த நேரத்தில் அந்தக் கட்சி சார்பில் கேட்கப்பட்டு அதற்குப் பதில் அளிக்கப்பட்டது மரபாக இருந்திருக்கிறது. அந்த மரபு தொடரும் என்ற எண்ணத்தில்தான் நான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாராளுமன்ற நடவடிக்கைகளில்தான் 'ஸீரோ ஹவர்' என்றிருக்கிறது. ஆனால் நம்முடைய சட்டமன்றத்தில் அத்தகைய மரபு ஒன்றும் இதுவரையில் இருந்ததில்லை.

திரு. மு. கருணாநிதி : நடந்ததையெல்லாம் அறவே மறந்துவிடக்கூடாது. இந்த அவையில் அந்த மரபு இருந்து பலநேரங்களில் இதுபோன்ற பிரச்னைகள் எழுப்பப்பட்டு அன்றிருந்த முதல் அமைச்சர் அவர்களாலோ அல்லது பொறுப்பான அமைச்சர்களாலோ அதற்கான விளக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 10-00.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நடந்தவைகளை எல்லாம் நடப்பவைகளாக ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பதினால்தான் இதைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று நினைக்கிறேன்.

திரு. க. சுப்பு : இது ஒரு முக்கியமான பிரச்சனை. பாராளு மன்றத்தில்கூட திரு. பாலாபழனூர், மோகனரங்கம் போன்ற வர்கள் இதைக் கிளப்பியிருக்கிறார்கள். இதைப்பற்றி சபா நாயகர் அவர்கள் கூட ஒரு ஸ்டேட்மென்ட் வைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இதுபற்றி அட்ஜெர்ன்மென்ட் மோஷன் கொடுத்திருக்கிறேன். அது என்ன ஆகுமோ தெரியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களிட மிருந்து பதில் இல்லையே . . . ஏற்கனவே அட்ஜெர்ன்மென்ட் எடுத்துக் மோஷன் கொடுத்திருந் தால் அது உரிய நேரத்தில் கொள்ளப்படும்.

திரு. துரை முருகன் : இதில் விதி முறை இருக்கிறதா இல்லையா என்பது வேறு பிரச்சனை. பொதுவாக தமிழ்நாட்டில் எல்லா மட்டத்திலும் இது பற்றி பேசிக்கொள்கிறார்கள். பிரத மரிடமிருந்து இப்படி ஒரு கடிதம் வந்திருக்கிறதா இல்லையா என்று சொல்லலாம் அல்லவா? வந்திருக்கிறது அல்லது இல்லை என்று சொல்ல வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களிடம் ஏதாவது தகவல் இருந்திருந்தால் சொல்லியிருப்பார் அல்லது வந்திருந்தாலும் சொல்லாமல் இருப்பார், அது அவருடைய உரிமை. ஏன் பதில் சொல்லவில்லை என்று கேட்கக்கூடிய உரிமை யாருக்கும் இல்லை.

திரு. துரை முருகன் : அப்படியென்றால் கடிதமே வரவில்லை என்று ஸ்பீக்கர் சொல்லுகிறாரா ?